BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# நகர்ப்புற வடிவமைப்பு திட்டமிடலில் தேசிய அளவிலான திறன் வெளிப்பாட்டிற்காக ப்ராம்ப்ட்டன் நகரம் அங்கீகாரம் பெற்றது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 26, 2021) – திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வு வகையில், "அப்டவுன் ப்ராம்ப்ட்டன் நகர பேருந்து போக்குவரத்து சார்ந்த சமுதாயங்களுக்கான சாதனத் தொகுப்பினை (Uptown Brampton Transit-Oriented Communities Toolkit)" சமர்ப்பித்தமைக்காக, நில எழிலமைப்புக்கலை வல்லுனர்களுக்கான கனடா நாட்டு சங்கத்தில் இருந்து, திறன் வெளிப்பாட்டிற்கான விருதினை (Award of Excellence) ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் வென்றிருக்கிறது.

இந்த திட்டத்தை அபிவிருத்தி செய்வதில் ப்ராம்ப்ட்டனின் நகர்ப்புற வடிவமைப்பு குழுவானது, டோரோன்ட்டோ ஸ்கூல் ஆஃப் சிட்டீ'ஸ் (Toronto School of Cities' ) மற்றும் நகர்ப்புற நில நிறுவனம் சார்ந்த டொராண்டோ மாவட்ட கவுன்சில் (Urban Land Institute Toronto District Council ) ஆகியவற்றுடன் கூட்டு சேர்ந்தது. அப்டவுன் ப்ராம்ப்ட்டன் நகரத்தின் பேருந்து போக்குவரத்து சார்ந்த சமுதாயங்களுக்கான சாதனத் தொகுப்பானது (Uptown Brampton Transit-Oriented Communities Toolkit), பொதுத்துறை, தனியார் துறை, இலாப நோக்கற்ற மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கிடையில் சிறந்த சீரமைப்பை ஆதரிக்கும் ஒரு கூட்டு நகரமைப்புக்கான மாதிரியைத் தேடிஆராய்கிறது.

அப்டவுன் நகருக்கான மாதிரியானது, ஒரு "26-மணிநேர நகரத்தின்" மதிப்பை வெளிக்கொண்டு வருகிறது; இங்கு 20 நிமிட நேரம் மட்டுமே நடந்து செல்லக்கூடிய சமூகங்கள், அதிக பயணநேரம் மற்றும் வாகனம் கொண்டிருக்க வெண்டியதன் அவசியத்தை அகற்றுகின்றன – இதனால் ஒவ்வொரு நாளும் "கூடுதல் நேரங்களை" வழங்கி, வாழ்க்கைத்தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துகின்றன. இந்த 'மாதிரி நகரமானது', உயர்தரமான வேலைகள் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதையும் ஆதரிக்கிறது என்பதுடன், கார்பன்-உமிழ்வு மட்டுப்படுத்தப்பட்ட எதிர்காலத்தை நோக்கி நகரத்தை நகர்த்த உதவுகிறது.

இந்த மாத தொடக்கத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் சி.எஸ்.எல்.ஏ (CSLA) விடம் இருந்து பதினான்கு திட்டப்பணிகள் தேசிய விருதைப் பெற்றன. இந்த விருது வென்ற திட்டங்கள் யாவும், நில எழிலமைப்புக் கலைஞர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையும், நாங்கள் வசிக்கின்ற, வேலை செய்கின்ற மற்றும் விளையாடுகின்ற இடங்களை மறுவடிவமைக்க அவர்கள் எவ்வாறு உதவுகிறார்கள் என்பதையும் காட்டுகிறது.

நில எழிலமைப்பு கலைஞர்கள் கொண்ட தேசிய தீர்ப்புக்குழுவினால் வெற்றி பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தமாக 72 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. தீர்ப்புக்குழுவினர் உபயோகித்த காரணிகளில் அடங்கும் விஷயங்கள்:

- இயற்கைக் கட்டமைப்பின் கைவினை பற்றிய ஆழமான புரிதலின் செயல்முறை வெளிப்பாடு மற்றும் அவற்றை ஒன்றுதிரட்டல் மற்றும் விவரங்களுக்கு கவனம் செலுத்துதல்;
- தலைமைப் பண்பு, திட்ட மேலாண்மை, பணியின் விரிவாக்கம், புதிய அறிவுறுத்தல்கள்/திசைகள் அல்லது புதிய தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குதல்;
- கருத்தாக்கம், அதன் செய்முறை, அதற்கான இடுபொருட்கள் அல்லது நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றில் புதுமை படைத்தல், ;
- தொடர்புடைய தொழில்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்களிடையே ஒழுக்கத்தை மேம்படுத்துதல்; மற்றும்,
- முன்மாதிரியான சுற்றுச்சூழல் மற்றும் / அல்லது சமூக விழிப்புணர்வில் செயல்முறை வெளிப்பாடு.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ப்ராம்ப்ட்டன் ஒரு முன்னோக்கு சிந்தனை கொண்ட வாய்ப்புக்களுக்கான நகரமாகும், இதற்காக துடிப்பான, ஆரோக்கியமான மற்றும் முழுமையான சமூகங்களுக்கான புத்திசாலித்தனமான திட்டமிடலுக்கு வழிவகுக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். 20 நிமிட நேரத்தில் எந்த ஒரு இடத்திற்கும் நடந்தே சென்றுவிடக்கூடிய வகையில் சமூகங்களுக்கான திட்டங்களைத் தொடர்ந்து மேம்படுத்துவதற்கும், அப்படவுன் ப்ராம்ப்ட்டனின் திறனை நாங்கள் எவ்வாறு வெளிப்படுத்துகிறோம் என்பதற்கான வழியை வெளிக்காட்டியமைக்கும் எங்கள் நகர்ப்புற வடிவமைப்பு குழுவை நான் பாராட்டுகிறேன். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ஹூரோன்டாரியோ எல்ஆர்டியில் இருக்கின்ற ஸ்டீல்ஸ் பேருந்து நிறுத்தமானது, மெட்ரோலின்க்ஸ் *2041* இன் பிராந்திய போக்குவரத்துத் திட்டத்திலும்*,* ப்ராம்ப்ட்டன் அதிகாரப்பூர்வ திட்டத்திலும் நடமாட்டத்திற்கான நுழைவாயில் மையமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியான விஷயமானது, உயர் தரமான நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டுதலுக்கான உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல பயண முறைகளுக்கான உயர் வளர்ச்சி மற்றும் வடிவமைப்பு கருத்தாய்வுகளை ஆதரிக்கிறது. உலகளாவிய தொற்றுநோய் நமக்கு எதையாவது கற்பித்திருக்குமா என யோசித்துப் பார்த்தால்*,* அது மாறும் நடத்தைகளுக்கு ஏற்ப நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதுவாகத்தான் இருக்கும். அப்படவுனை போக்குவரத்து சார்ந்த சமூகமாக மாற்றுவது எங்கள் குடியிருப்பாளர்கள்*,* வணிகங்கள் மற்றும் உள்ளூர் பங்குதாரர்களுக்கு மிகச்சரியான அர்த்தத்தை தருகிறது*. ”*

BRAMPTON

Media Release

- *மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைமைப் பொறுப்பு, திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத்துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ஒரு நகர நிர்வாகமாக இருந்தபடி, எங்கள் குடியிருப்பாளர்களின் யோசனைகளையும் தேவைகளையும் பிரதிபலிக்கின்ற வகையில் வாழ்வாதாரம், ஆரோக்கியம் மற்றும் முழுமைபெற்ற சமூகங்கள் ஆகியவற்றைத் திட்டமிடுவதற்கு நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளோம். இந்த கௌரவமான விருது பெற்றமைக்காக நகர வடிவமைப்பு குழுவுக்கு எங்கள் வாழ்த்துக்கள் உரித்தாகுக. ப்ராம்ப்ட்டனின் இந்த பகுதியை போக்குவரத்து சார்ந்த சமூகமாக வளர்ப்பதற்கான முதலீட்டை முன்னேற்றுவதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை அப்டவுனில் உள்ள ஷாப்பர்ஸ் வேர்ல்ட் தளம் வழங்குகிறது. ”

- *டேவிட் பேர்ரிக், தலமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்புகள்**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca